பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

11 05 2024 7 15

சனிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மக்களவைக்கு நான்காவது கட்ட வாக்குப்திவு நடைபெற உள்ள 96 தொகுதிகளில் இன்று மாலையுடன் பிரச்சாரம் நிறைவடைகிறது.

2. உச்சநீதிமன்றம் ஜாமின் வழங்கியதை அடுத்து தில்லி முதலமைச்சர் திரு. அரவிந்த் கெஜ்ரிவால் திகார் சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டார்.

3. சத்தீஸ்கர் மாநிலம் **Bijapur**-ல் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கையில் மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் 12 பேர் கொல்லப்பட்டனர்.

4. பாலஸ்தீனத்திற்கு முழு உறுப்பினர் அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என்று ஐ.நா. சபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானம் நிறைவேறியது.

5. தோஹாவில் நடைபெற்ற டைமண்ட் லீக் ஈட்டி எறிதல் போட்டியில் இந்திய வீரர் நீரஜ் சோப்ரா வெள்ளிப் பதக்கம் வென்றார்.

***<u>---- இனி விரிவான செய்திகள் ---</u>***

<<<<>>>>

மக்களவைக்கு நான்காவது கட்ட வாக்குப்திவு நடைபெற உள்ள 96 தொகுதிகளில் இன்று மாலையுடன் பிரச்சாரம் நிறைவடைகிறது.

இந்தத் தொகுதிகளில் அரசியல் கட்சித் தலைவர்கள் கடைசி கட்ட பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ஆந்திரப்பிரதேசத்தில் 25, தெலங்கானாவில் 17, உத்தரப்பிரதேசத்தில் 13, மகாராஷ்டிராவில் 11, மேற்குவங்கம் மற்றும் மத்தியப்பிரதேசத்தில் தலா 8, பீஹாரில் 5, ஜார்கண்ட் மற்றும் ஒடிசாவில் தலா 4, ஜம்மு-கஷ்மீரில் ஒரு தொகுதி என மொத்தம் 96 தொகுதிகளில் நாளை மறுநாள் வாக்குப்பதிவு நடைபெற உள்ளது.

பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி நேற்று தெலங்கானா மாநிலம் ஹைதராபாத் மற்றும் நாராயண்பேட் பகுதிகளில் தீவிரப் பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.

பிஜேபி மூத்த தலைவர்களில் ஒருவரான திரு. அமித் ஷா, மேற்குவங்கம் மற்றும் ஜார்கண்ட் மாநிலங்களின் பல்வேறு பகுதிகளில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் பங்கேற்று உரையாற்றினார்.

எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி சந்தர்ப்பவாத கூட்டணி என்றும், பழங்குடியின மக்களின் நலனுக்காக இந்த அணியில் இடம்பெற்றுள்ள கடசிகள் ஆளும் மாநிலங்களில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் கூறினார்.

உத்தரப்பிரதேச மாநிலத்தில் சமாஜ்வாதி கட்சித்தலைவர் திரு. அகிலேஷ் யாதவ், காங்கிரஸ் மூத்த தலைவர் திரு. ராகுல் காந்தியுடன் இணைந்து கண்னோஜ், கான்பூர் உட்பட பல்வேறு இடங்களில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் உரையாற்றினார்.

பிஜேபி அரசியல் சாசனத்தை மாற்றியமைக்க முயற்சிப்பதாக அவர் குற்றம் சாட்டினார்.

இந்தக் கூட்டத்தில் பேசிய திரு. ராகுல் காந்தி, மத்தியில் எதிர்க்கட்சிகளின் கூட்டணி ஆட்சி அமைந்தால் விவசாயிகள் வறுமையில் இருந்து விடுபடுவத்றகாக அவர்களுக்கு நிதியுதவி அளிக்கப்படும் என்று கூறினார்.

உத்தரப்பிரதேச மாநிலத்தில் எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி வலுவான கூட்டணியாக மாறியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இதற்கிடையே மக்களவைக்கு 5வது மற்றும் 6வது கட்ட வாக்குப்பதிவு நடைபெற உள்ள தொகுதிகளில் பிரச்சாரம் விறுவிறுப்பான கட்டத்தை எட்டியுள்ளது.

மாநில மற்றும் தேசிய கட்சிகளின் தலைவர்கள் முகாமிட்டு தங்களது கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டி வருகின்றனர்.

<<<<>>>>

மதுபான கொள்கை முறைகேடு வழக்கில் தில்லி முதலமைச்சர் திரு. அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு, உச்சநீதிமன்றம் இடைக்கால ஜாமின் வழங்கியதை அடுத்து, அவர் திகார் சிறையில் இருந்து நேற்று மாலை விடுவிக்கப்பட்டார்.

முன்னதாக அவர் தாக்கல் செய்த ஜாமின் மனுவை விசாரணை செய்த நீதிபதிகள் திரு. **Sanjiv Khanna,** திரு. **Dipankar Datta** அமர்வு, மக்களவைத் தேர்தலை கருத்தில் கொண்டு அவருக்கு இடைக்கால ஜாமின் வழங்க உத்தரவிட்டது.

ஜூன் 2ஆம் தேதி திரு. அரவிந்த் கெஜ்ரிவால் நீதிமன்றத்தில் சரணடைய வேண்டும் என்றும் அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உச்சநீதிமன்றத்தின் இந்த தீர்ப்பினை வரவேற்றுள்ள காங்கிரஸ் மூத்த தலைவர் திரு. பவன் கேரா, இதேபோல் ஜார்கண்ட் முன்னாள் முதலமைச்சர் திரு. ஹேமந்த் சோரனுக்கும் விரைவில் நீதி கிடைக்கும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

அதேநேரத்தில் உச்சநீதிமன்றம் திரு. கெஜ்ரிவாலுக்கு தேர்தலில் பிரச்சாரம் செய்ய மட்டுமே இடைக்கால ஜாமின் வழங்கியுள்ளது என்றும், அடுத்த மாதம் ஒன்றாம் தேதிக்குப் பிறகு அவர் மீண்டும் சிறைக்குச் செல்ல வேண்டும் என்றும் பிஜேபி மூத்த தலைவர்களில் ஒருவரான திரு. மணீந்தர் சிங் சிர்சா கூறினார்.

<<<<>>>>

சத்தீஸ்கர் மாநிலம் **Bijapur**-ல் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கையில் மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் 12 பேர் கொல்லப்பட்டனர்.

பிடியா என்ற அடர்ந்த வனப்பகுதியில் மாவட்ட ரிசர்வ் படையினர் சிறப்பு அதிரடிப் படையினர் கூட்டாக மேற்கொண்ட தேடுதல் பணியின்போது இருதரப்பினருக்கும் இடையே கடும் துப்பாக்கிச் சண்டை ஏற்பட்டது.

அப்போது பாதுகாப்புப் படையினர் துப்பாக்கியால் சுட்டதில் மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் 12 பேர் கொல்லப்பட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

சுமார் 4 மணி நேர மோதல் சம்பவத்திற்குப் பின்னர் தீவிரவாதிகளின் மறைவிடங்களில் இருந்து வெடிமருந்துகளும், ஆயுதங்களும் கண்டெடுக்கப்பட்டன.

இந்த மோதலில் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த 2 வீரர்கள் படுகாயம் அடைந்தனர்.

அவர்களுக்கு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

<<<<>>>>

பாலஸ்தீனத்திற்கு முழு உறுப்பினர் அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என்று ஐ.நா. சபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானம் இந்தியா உள்ளிட்ட 143 நாடுகளின் ஆதரவுடன் நிறைவேறியது.

193 உறுப்பினர்களைக் கொண்ட ஐ.நா. பொதுச்சபையில் அரபு நாடுகள் அவசர தீர்மானத்தை நேற்று கொண்டுவந்தன.

பாலஸ்தீனம், ஐ.நா. சபையில் முழு உறுப்பினராக சேர்த்துக்கொள்ள தகுதிபெற்ற நாடு என்று அந்தத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதையடுத்து அந்தத் தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது தீர்மானத்திற்கு ஆதரவாக இந்தியா உட்பட 143 நாடுகள் வாக்களித்தன.

இஸ்ரேல், அமெரிக்கா உட்பட 9 நாடுகள் தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்தன. 25 நாடுகள் நடுநிலைமை வகித்தன.

உலகிலேயே பாலஸ்தீனத்தை ஒரு நாடாக இந்தியாதான் 1988ஆம் ஆண்டு அங்கீகரித்தது.

மேலும் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை, பாலஸ்தீன மக்களின் சட்டப்பூர்வ பிரதிநிதியாகவும் அங்கீகரித்த அரபு அல்லாத நாடு இந்தியா என்பது குறிப்பிடத்தக்கது.

<<<<>>>>

பாலஸ்தீனத்தின் ரஃபா பகுதிக்குள் இஸ்ரேல் படைகள் நுழைந்தால் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கேம்ப் டேவிட் ஒப்பந்தத்தை ரத்து செய்யப்போவதாக எகிப்து, இஸ்ரேலுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

ரஃபா எல்லையில் ஏராளமான ராணுவ தளவாடங்களை இஸ்ரேல் குவித்து வைத்துள்ள நிலையில் எகிப்து இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

இஸ்ரேல் ராணுவத்தினர் காஸா தெற்கு பகுதியில் உள்ள ரஃபாவில் நுழைந்து தாக்குதல் நடத்தினால் பாலஸ்தீன மக்களுக்கு கடுமையான சேதம் ஏற்படும் என்று ஏற்கனவே இஸ்ரேல் கவலை தெரிவித்திருந்தது.

மேற்கு ஆசியாவில் அமைதியை ஏற்படுத்த அமெரிக்கா உதவியுடன் 1978ஆம் ஆண்டு இஸ்ரேல் - எகிப்து இடையே கேம்ப் டேவிட் ஒப்பந்தம் கையெழுத்தானது.

இந்த ஒப்பந்தம் அரபு நாடு ஒன்றுடன் இஸ்ரேல் செய்துகொண்ட முதலாவது அமைதி ஒப்பந்தம் என்று அழைக்கப்படுகிறது.

<<<<>>>>

அரசியல் நெருக்கடி காரணமாக குவைத் நாடாளுமன்றத்தை கலைத்து அந்நாட்டு மன்னர் **Sahik Meshal Al Ahmed Al Saba** உத்தரவிட்டுள்ளார்.

தொலைக்காட்சியில் உரையாற்றிய அவர், நாட்டின் நலனைப் பாதுகாப்பதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக கூறினார்.

கடந்த மாதம் குவைத்தில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் மொத்தமுள்ள 46 இடங்களில் ஏற்கனவே உறுப்பினர்களாக இருந்த 39 பேர் மீண்டும் வெற்றி பெற்றனர்.

குவைத்தின் அரசியலமைப்பின்படி தேர்தல் முடிந்த 2 வாரங்களுக்குள் புதிய அரசு அமைக்கப்பட வேண்டும்.

ஆனால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற பிரதிநிதிகளுக்கும், பிரதமருக்கும் இடயே மோதல் உருவானதை அடுத்து தற்போது நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

தெற்கு கேரளா மற்றும் அதனையொட்டிய பகுதிகளின் மேல் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுவதால் தமிழகத்தின் ஒருசில இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இன்று இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நீலகிரி, கோவை, தேனி, திண்டுக்கல், விருதுநகர், தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய 8 மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒருசில பகுதிகளில் லேசானது முதல் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையில் அதிகபட்ச வெப்பநிலை 35 டிகிரி முதல் 36 டிகிரி செல்சியசை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 28 டிகிரி முதல் 29 டிகிரி செல்சியசை ஒட்டியும் இருக்கக்கூடும் என்று வானிலை மையம் கூறியுள்ளது.

<<<<>>>>

தோஹாவில் நடைபெற்ற டைமண்ட் லீக் ஈட்டி எறிதல் போட்டியில் இந்திய வீரர் நீரஜ் சோப்ரா வெள்ளிப் பதக்கம் வென்றார்.

நேற்று நடைபெற்ற போட்டியில் உலகின் முன்னணி ஈட்டி எறிதல் வீரர்கள் 10 பேர் பங்கேற்றனர்.

ஒலிம்பிக் சாம்பியனான நீரஜ் சோப்ரா, 6வது வாய்ப்பில் அதிகபட்சமாக 88 புள்ளி மூன்று ஆறு மீட்டர் தூரம் ஈட்டி எறிந்து வெள்ளிப் பதக்கம் வென்றார்.

செக் குடியரசின் **Jakub Vadlejch** அதிகபட்சமாக 88 புள்ளி மூன்று எட்டு மீட்டர் தூரம் ஈட்டி எறிந்து தங்கப் பதக்கத்தை வென்றார்.

**Granada**-வின் ஆன்டர்சன் பீட்டர்ஸ் 86 புள்ளி ஆறு இரண்டு மீட்டர் தூரம் ஈட்டி எறிந்து வெண்கலப் பதக்கம் வென்றார்.

இந்தப் போட்டியில் பங்கேற்ற மற்றொரு இந்தியா வீரரான ஜனா, அதிகபட்சமாக 76 புள்ளி ஏழு ஒன்று மீட்டர் தூரம் ஈட்டி எறிந்து 9வது இடத்தைப் பிடித்தார்.

---------------

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் குஜராத் அணி 35 ரன் வித்தியாசத்தில் சென்னை அணியை வென்றது.

அகமதாபாதில் நேற்றிரவு நடைபெற்ற இப்போட்டியில் முதலில் விளையாடிய குஜராத் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு 231 ரன் எடுத்தது.

அந்த அணியின் சாய் சுதர்ஷன், ஷுப்மன் கில் ஆகியோர் குறைந்த பந்துகளில் சதமடித்தனர்.

132 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய சென்னை அணி, 8 விக்கெட் இழப்புக்கு 196 ரன் எடுத்தது.

கொல்கத்தாவில் இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் மும்பை அணி – கொல்கத்தா அணியை எதிர்கொள்கிறது.

-------------

இந்திய கிரிக்கெட் அணிக்கான புதிய தலைமைப் பயிற்சியாளர் விரைவில் தேர்ந்தெடுக்கப்படுவார் என்று கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரிய செயலாளர் திரு. ஜெய் ஷா தெரிவித்துள்ளார்.

தற்போது தலைமைப் பயிற்சியாளராக உள்ள ராகுல் டிராவிடின் பதவிக்காலம் அடுத்த மாதத்துடன் முடிவடைகிறது.

------------

ஆசிய ஸ்குவாஷ் தொடருக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

சீனாவில் டாலியா நகரில் அடுத்த மாதம் 12ஆம் தேதி முதல் 14ஆம் தேதி வரை நடைபெற உள்ள இந்தப் போட்டியில் தேசிய சாம்பியனான வேலவன் செந்தில்குமார் தலைமையிலான இந்திய அணியில், அபய் சிங், ராகுல் ஃபாய்தா, சுராஜ் சந்த் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

ராதிகா சீலன் தலைமையிலான மகளிர் அணியில் பூஜா ஆர்த்தி, சுனிதா பட்டேல், ஜானட் விதி ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

**<<<<the end>>>>**